# முக்கிய குறிப்புகள்

| | |
|---|---|
| **பாரம்பரியம்** | • ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குப் பண்புகள் கடத்தப்படுவது பாரம்பரியம்.<br>• ***கிரிகர் ஜோகன் மெண்டல்*** மரபியலின் அடிப்படைத் தத்துவங்களை கண்டுபிடித்தார். |
| **சொல்லாக்கம்** | • **புறத்தோற்றம் :** ஒரு குறிப்பிட்ட பண்பின் வெளித்தோற்றம்.<br>• **ஜீனோடைப் :** தாவரங்களின் ஜீனாக்கம் ஜீனோடைப்.<br>• **ஹோமோசைகஸ் :** தாவரங்கள் தனது ஜோடிகளில் காரணிகள் ஒரே வகையைச் சேர்ந்தவையாக இருத்தல். **எ.கா :** TT-நெட்டை, tt-குட்டை<br>• **ஹெட்டிரோசைகஸ் :** தாவரங்கள் தனது ஜோடிகளில் காரணிகள் வெவ்வேறு வகையையைச் சேர்ந்தவையாக இருத்தல். **எ.கா :** Tt-நெட்டை.<br>• **அல்லீல்கள் :** இரு வகையான காரணிகள் ஒரு ஜோடி பண்புகள் தோன்றுவதற்குக் காரணமாக உள்ளன.<br>• **ஓங்கு பண்பு :** கருவுறுதலின் போது வெளிப்படும் பண்பு.<br>• **ஒடுங்கு பண்பு :** கருவுறுதலின் போது மறைக்கப்படும் பண்பு. |

## ஒரு பண்பு கலப்பு

ஒரு பண்பின் இருமாற்றுத் தோற்றங்களுக்கிடையில் ஏற்படும் இனக்கலப்பு.




## இரு பண்பு கலப்பு

இரண்டு இணை எதிரெதிரான பண்புகளைப் பற்றிய இனக்கலப்பு.




**$F_2$ தலைமுறை**

| | RY | rY | Ry | ry |
|---|---|---|---|---|
| RY | RRYY | RrYY | RRYy | RrYy |
| rY | RrYY | rrYY | RrYy | rrYy |
| Ry | RRYy | RrYy | RRyy | Rryy |
| ry | RrYy | rrYy | Rryy | rryy |

**புறத்தோற்ற விகிதம் –9 : 3 : 3 : 1**

- RRYY(1), RRYy(2), RrYY(2), RrYy(4)– உருண்டை மஞ்சள்- 9
- RRyy (1), Rryy(2) – உருண்டை பச்சை– 3
- rrYy(2), rrYY(1) – சுருங்கிய மஞ்சள் – 3
- rryy – சுருங்கிய பச்சை – 1

## மெண்டல் பயன்படுத்திய பட்டாணி தாவரத்தின் 7 பண்புகள்

| பண்பு | ஓங்கு பண்பு | ஒடுங்கு பண்பு |
|---|---|---|
| தண்டின் உயரம் | நெட்டை | குட்டை |
| மலரின் அமைவிடம் | கோண மலர் | நுனி மலர் |
| மலரின் நிறம் | ஊதா | வெள்ளை |
| கனியின் வடிவம் | உப்பியது | சுருங்கியது |
| கனியின் நிறம் | பச்சை | மஞ்சள் |
| விதையின் வடிவம் | உருண்டை | சுருங்கியது |
| விதையின் நிறம் | மஞ்சள் | பச்சை |

| | |
|---|---|
| **மெண்டலின் விதிகள் / பாரம்பரிய விதிகள்** | i) ஓங்கு தன்மை விதி<br>ii) தனித்துப் பிரிதல் விதி அல்லது கேமிட்டுகளின் கலப்பற்ற தன்மை விதி<br>iii) சார்பின்றி ஒதுங்குதல் விதி |

**குரோமோசோம்கள் :** *ஒவ்வொரு செல்லின் உட்கருவிலும் நூல் போன்ற அமைப்புகள் குரோமோசோம்கள் ஆகும்.*

### குரோமோசோமின் அமைப்பு

இரண்டு ஒத்த இழைகளை உள்ளடக்கிய மெல்லிய, நீண்ட மற்றும் நூல் போன்ற அமைப்புகள் ***சகோதரி குரோமேட்டிடுகள்.***

***i)*** **முதன்மைச் சுருக்கம் / சென்ட்ரோமியர் :** குரோமோசோமின் இரண்டு கரங்களும் இணையும் புள்ளி.

***ii)*** **இரண்டாம் நிலைச் சுருக்கம்/ உட்கருப் பகுதி/ உட்கருமணி உருவாக்கும் பகுதி :** குரோமோசோமின் எந்தப் புள்ளியிலும் நிகழும்.

***iii)*** **டீலோமியர் :** நிலைப்புத் தன்மையை அளிக்கும் குரோமோசோமின் இறுதிப் பகுதி.

***iv)*** **சாட்–குரோமோசோம்கள் :** குரோமோசோம்களின் ஒரு முனையில் நீண்ட குமிழ் போன்ற இணையுறுப்பு (சாட்டிலைட்).

## சென்ட்ரோமியரின் நிலைக்கு ஏற்ப குரோமோசோம்களின் வகைகள்

| | |
|---|---|
| **டீலோசென்ட்ரிக்** | சென்ட்ரோமியர் குரோமோசோமின் ஒரு முனையில் காணப்படுகிறது. கோல் வடிவமுடையது. |
| **அக்ரோசென்ட்ரிக்** | சென்ட்ரோமியர் குரோமோசோமின் ஒரு முனைக்கு அருகில் காணப்படுவதால், ஒரு குட்டையான கரமும் ஒரு நீண்ட கரமும் பெற்றுள்ளன. கோல் வடிவமுடையது. |
| **சப்–மெட்டா சென்ட்ரிக்** | சென்ட்ரோமியர் குரோமோசோமின் மையத்திற்கு அருகில் உள்ளது மற்றும் இரண்டு சமமற்ற கரங்கள் உருவாகின்றன. J வடிவம் அல்லது L வடிவமுடையது. |
| **மெட்டா சென்ட்ரிக்** | சென்ட்ரோமியர் குரோமோசோமின் மையத்தில் அமைந்து இரண்டு சம நீளமுள்ள கரங்களை உருவாக்குகிறது. V வடிவமுடையது. |

## பணிகளின் அடிப்படையில் குரோமோசோம்களின் வகைகள்

| | |
|---|---|
| **ஆட்டோசோம்கள்** | இவை உடல் பண்புகளை நிர்ணயிக்கும் ஜீன்களைப் பெற்றுள்ளன. ஆண் மற்றும் பெண் உயிரிகள் சம எண்ணிக்கையில் உடல் குரோமோசோம்களைப் பெற்றுள்ளன. |
| **அல்லோசோம்கள் / பால் குரோமோசோம்கள்/ ஹெட்டிரோசோம்கள்** | ஓர் உயிரியின் பாலினத்தை நிர்ணயிக்கின்றது. **வகைகள் :** X மற்றும் Y குரோமோசோம்கள்<br>❋ ***மனித ஆண்*** - ஒரு X மற்றும் ஒரு Y குரோமோசோம்<br>❋ ***மனித பெண்*** - இரண்டு X குரோமோசோம்கள் |
| **கேரியோடைப்** | இது ஓர் உயிரினத்தில் செல் உட்கருவில் உள்ள குரோமோசோம்களின் எண்ணிக்கை, அளவு & வடிவம்.<br>**இடியோகிராம்** என்பது ஒரு சிற்றினத்தின் கேரியோடைப் வரைபட விளக்கம் ஆகும்.<br>**ஒற்றை மய செல்கள்**- ஒரு குரோமோசோம் தொகுப்பு **இரு மய செல்கள்** - குரோமோசோம்கள் ஜோடி |

## டி.என்.ஏ

*டீ ஆக்ஸி ரைபோ நியூக்ளிக் அமிலம் (டி.என்.ஏ)* என்பது *மரபுத் தகவல்களை உள்ளடக்கிய பாரம்பரியப் பொருள்.*

| | |
|---|---|
| **டி.என்.ஏ மூலக்கூறின் வேதி இயைபு** | இது மில்லியன் நியூக்ளியோடைடுகளை உள்ளடக்கிய பாலி நியூக்ளியோடைடு. ஒவ்வொரு நியூக்ளியோடைடும்,<br>நியூக்ளியோடைடு = நியூக்ளியோசைடு + பாஸ்பேட்<br>⇩<br>நைட்ரஜன் காரம் + சர்க்கரை<br>⇩ பியூரின்கள் – அடினைன் & குவானைன்; பிரிமிடின்கள் – சைட்டோசின் & தையமின்<br>⇩ டீ ஆக்சிரைபோஸ் சர்க்கரை |
| **டி.என்.ஏ இரட்டிப்படைதல்** | இரட்டிப்பாதல் செயல்பாட்டின் பொழுது டி.என்.ஏ மூலக்கூறு தன் அமைப்பை ஒத்த நகல்களை உருவாக்குகிறது.<br>**<u>டி.என்.ஏ இரட்டிப்பாதல் உள்ளடக்கிய படிகள் :</u>**<br>i) இரட்டிப்பாதலின் தொடக்கம் ii) டி.என்.ஏ மூலக்கூறு பிரிதல்<br>iii) ஆர்.என்.ஏ பிரைமர் உருவாதல் iv) புதிய நிரப்பு இழையின் தோற்றம் |

## பாலின நிர்ணயம்

- கருவுற்ற முட்டை, ஆண் அல்லது பெண் உயிரியாக வளர்ச்சியடைவது ***பாலின நிர்ணயம்*** எனப்படும்.
- மனிதனில் உள்ள 23 ஜோடி குரோமோசோம்களில் 22 ஜோடி ஆட்டோசோம்கள் மற்றும் 1 ஜோடி (23வது ஜோடி) பால் குரோமோசோம்கள்

| | |
|---|---|
| **ஹோமோகேமீட்டிக்** | **எ.கா :** பெண் கேமீட்டுகள் (அ) அண்ட செல்கள் **(i) (22+X) (ii) (22+X)** குரோமோசோம்கள் |
| **ஹெட்டிரோகேமீட்டிக்** | **எ.கா :** ஆண் கேமீட்டுகள் (அ) விந்தணுக்கள் **(i) (22+X) (ii) (22+Y)** குரோமோசோம்கள் |

## சடுதிமாற்றம்

பரம்பரையாகத் தொடரக்கூடிய, திடீரென ஓர் உயிரியின் மரபுப்பொருளில்(DNA) திடீரென ஏற்படும் மாற்றம்

| | |
|---|---|
| **குரோமோசோம் சடுதி மாற்றம்** | குரோமோசோம் அமைப்பு அல்லது எண்ணிக்கையில் ஏற்படும் திடீர் மாற்றம்.<br>**i) குரோமோசோம் அமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் :** செல்பகுப்பின் போது ஏற்படும் தவறுகள் காரணமாக<br>**ii) குரோமோசோம் எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றங்கள் (பிளாய்டி) :**<br>குரோமோசோம் எண்ணிக்கை அதிகரித்தல் அல்லது குறைதல்.<br>**(அ)யூபிளாய்டி :** வழக்கமான இருமய(2n) குரோமோசோம்களைவிட அதிக எண்ணிக்கையில் பெற்றுள்ள நிலை. **எ.கா :** மும்மய நிலை (3n), நான்மய நிலை (4n)<br>**(ஆ)அன்யூபிளாய்டி:** தொகுப்பில் உள்ள ஒன்று (அ) அதற்கு மேற்பட்ட குரோமோசோம்களை இழத்தல் அல்லது கூடுதலாகப் பெறுதலாகும்.<br>**எ.கா :** மோனோசோமி (2n-1), டிரைசோமி (2n+1) & நல்லிசோமி (2n-2).<br>**டவுன் நோய்க் கூட்டு அறிகுறி** : 21 வது குரோமோசோமில் ஒரு கூடுதல் நகல் குரோமோசோம் (21-வது டிரைசோமி) உள்ள நிபந்தனை. |
| **ஜீன் / புள்ளி சடுதிமாற்றம்** | • இது ஒரு ஜீனின் நியூக்ளியோடைடு வரிசையில் ஏற்படும் மாற்றங்கள் ஆகும்.<br>• இது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நைட்ரஜன் காரங்களில் ஏற்படும் பதிலீடு செய்தல், நீக்கமடைதல், இடைச்சேர்தல் அல்லது தலைகீழாதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. |